7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு, 2011 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2011) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.*

13. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2011) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2011),@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், இப்போது மணி 2-04 ஆகிறது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

பிற்பகல் 2-05

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்* தமிழகத்தினுடைய நீண்ட நெடிய வரலாற்றில் விளிம்பு நிலையில் வாழ்கின்ற மக்கள், சமூகத்தின் அடித்தட்டில் எவ்விதமான சமூகப் பாதுகாப்பும் இல்லாமல் வாழ்கின்ற மக்கள், உழைக்கின்ற மக்களுக்காகச் சிந்தித்துப் பார்த்து, ஒவ்வொரு தரப்பினருக்கும்

@ 10-2-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.